
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1123

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

150

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த சத்தியமங்கலம் முத்து அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# சத்தியமங்கலம் முத்து ; தமிழ் காத்த திசைகாட்டி!

1965-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள், இந்தி மொழி அரியணை ஏறும் நாள் என அன்றைய ஒன்றிய அரசு அறிவித்திருந்ததை எதிர்த்து, அதைத் துக்க நாள் என்று அறிவித்து, அறப்போர் நடத்தத் திட்டமிட்டது கழகம். எழுச்சியும் உணர்ச்சியும் பெற்ற தமிழ்நாட்டு மாணவர்கள், அதற்கு முதல் நாளே-ஜனவரி 25-ஆம் தேதியே போராட்டத்தைத் தொடங்கிவிட்டனர்.

1965-ஆம் ஆண்டு, போராட்டம் தொடங்குவதற்கான அடித்தளத்தை, அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது கழகம். 1963-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களிலும், ஒவ்வொரு மாதமும் போராட்டத்தில் ஈடுபட்டு, கழகத்தினர் அலை அலையாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு வந்தனர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எரிக்க முயன்றதாகத், தேசிய சின்ன அவமதிப்பு சட்டத்தின்படி, இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார் பேரறிஞர் அண்ணா. அவருக்கு ஆறு மாதம் சிறைத்தண்டனை தரப்பட்டது. 25-ஆம் தேதி நள்ளிரவில் கைது செய்யப்பட்டார் முத்தமிழறிஞர் கலைஞர். அவரோடு பல ஆயிரம் கழகத்தினரும்.

மக்களும் மாணவர்களும் தமிழ் காக்கும் போராட்டத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருந்த அந்த நாட்களில், கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், சிவகங்கை ராசேந்திரன், கீரனூர் முத்து என அடுத்தடுத்து நிகழ்ந்த களப்பலிகள் தமிழ்நாட்டின் உணர்ச்சிக் கொந்தளிப்பை மேலும் மேலும் பெருக்கிக்கொண்டிருந்தன. பிப்ரவரி 11-ஆம் தேதி காலை, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்த நிலையில், அந்த வியாழக்கிழமை மாலை மற்றுமொரு களப்பலியாக சத்தியமங்கலத்தில், 'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக' என்று முழங்கியவாறே தீக்குளித்தார் முத்து. 23 வயதேயான கழகத்தின் தொண்டர்.

பட்டதாரிகள், மாணவர்கள், அரசுப் பணியில் இருந்தவர்கள் என கழகத்தோடு இணைந்து பயணித்த கண்மணிகள் அடுத்தடுத்து தங்கள் உயிரையே போராட்டக் களத்துக்கு அர்ப்பணித்துக்கொண்டிருந்த நிலையில், களச்செயல் வீரராக இருந்த முத்துவும் தன்னையே ஆகுதியாக்கிக்கொண்டு மொழிப்போர் வரலாற்றில் இணைந்தார்.

### தமிழ் வாழ வேண்டும்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ள கொமாரபாளையம் தான் முத்து பிறந்த ஊர். பெருமாள் - பார்வதி இணையருக்கு இரண்டாவது மகனாக 1942-ஆம் ஆண்டு, ஜூலை 31-ஆம் தேதி பிறந்தவர். கொமாரபாளையம் தொடக்கப்பள்ளியில் 5-ஆம் வகுப்பு வரை படித்துவிட்டு, துணிக்கடையிலும் லாரி பழுதுபார்க்கும் பட்டறையிலும் பணியாற்றி வந்தவர். அங்குள்ள கிளைக் கழகத் தோழர்களோடு அரசியல் பேசிப் பழகி வந்தார்.

கழகத்தின் அரசியல் மேடைகள், பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர் எனக் கழக முன்னோடிகளின் உரைகள், கட்டுரைகளை வாசித்து அரசியல் தெளிவு பெற்றவராக இருந்தார். செய்தித்தாள்களில், உரை வீச்சுகளில், தமிழ் காக்கும் போராட்டத்தின் வீர மரணங்களை மனத்தில் ஏற்றிக் கொண்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் தமிழின் மீதும் தாளமுடியாத ஆர்வம் கொண்டிருந்தவர், இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டம், உயிர்ப்பலி ஆகியவற்றைக் கவனித்து வந்தவர், பேரறிஞர் அண்ணா கைது, கலைஞர் கைது ஆகியவற்றினால் எழுந்த கோபம் ஆகியவை அவரை தன்னையே தமிழுக்காக உயிர் விடத் தூண்டியது.

'தனது மரணம் அப்பகுதியில் எழுச்சியை உருவாக்கும், இந்தியை வீழ்த்தும்' என நம்பிய அந்த உடன்பிறப்பு, முதல் நாளிலேயே கழகத் தோழர்களிடம் மனம் வெதும்பி கூறியிருக்கிறார். 'தமிழ் காக்கும் போராட்டத்தில் நம் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்களே என்றும், இளைஞர்கள் செத்து மடிகிறார்களே என்றும் உள்ளம் வருந்தியவராக இருந்துள்ளார்.

1965 பிப்ரவரி மாதம் 11-ஆம் தேதி முடிவு செய்தவராகத் தன் அண்ணன் குடும்பத்தாரிடம் விடைபெற்றுக்கொண்டு, வழக்கம்போல பணிக்குச் சென்றுள்ளார். அன்று மாலை 7 மணி அளவில், தான் பணியாற்றிய பட்டறைக்கு வெளியே வந்து உடலின்மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்துக்கொண்டு **'தமிழ் வாழ்க - இந்தி ஒழிக'** என்று முழங்கிய வாறே வீழ்ந்தார்.



ஓவியம் : ரவி பேலட்

மக்கள் அவரை சுமந்து சென்று, சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அதிகாரிகள், காவல் துறையினர் பதிவுசெய்த வாக்குமூலங்களில், "மாணவர்கள் தாக்கப் படக் கூடாது, தமிழினம் வாழ வேண்டும், தமிழ் வாழ வேண்டும், தலைவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்" எனக் கூறி இருந்தார்.

### தமிழ்ச்செல்வி

உடல் முழுவதும் வெந்து, தீவிர சிகிச்சையில் இருந்த நிலையில், முத்துவின் அண்ணன் தன் பெண் குழந்தையைத் தூக்கிவந்து பெயர் சூட்ட வைத்துள்ளார். அந்தத் தியாக சீலர், இரண்டு மாத பிஞ்சுக் குழந்தைக்கு 'தமிழ்ச்செல்வி' எனப் பெயர் சூட்டி, பிப்ரவரி 18 அன்று சாகும் தருவாயிலும் தமிழ்ப் பற்றை உரத்துக் கூறிய பின்னரே கண் மூடி இருக்கிறார்.

அவரது உடல் சொந்த ஊரான கொமாரபாளையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்தக் கிராமம் முழுவதும் துணை ராணுவத்தினர் சூழ்ந்திருந்தபோதிலும் கழகத்தினர் உணர்ச்சிப்பெருக்கில் எழுப்பிய முழக்கத்தோடு, தமிழுணர்வு கொண்ட மக்கள் திரள, நல்லடக்கம் செய்யப்பட்டது.

சிறையில் இருந்து விடுதலையான கலைஞர், மொழிப் போரில் மடிந்த தியாகிகளின் வீடு தேடிச் சென்று ஆறுதல் அளித்தார். 1966-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திருச்சி - தஞ்சை மாவட்டக் கழக மாநாட்டில் முத்துவின் மறைவுக்குக் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டு, மதுரையில் நடந்த கழக மாநாட்டு அரங்குக்கு, 'சத்தியமங்கலம் முத்து' எனப் பெயர் சூட்டப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் மொழிப்போர் ஈகியர் நாளில் சத்தியமங்கலம் முத்துவின் பெயரை உரத்து முழங்கிக்கொண்டிருக்கின்றனர் கழகத்தினர். 2026 மொழிப்போர் நாள் கூட்டத்தில் உரையாற்றிய இன்றைய கழகத் தலைவர் அவர்கள், " 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம் இவை உண்டு, தானுண்டு' என்று வாழக்கூடாது என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவரது கவிதை வரிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள்தான் மொழிப்போர் தியாகிகள்! இதில் திராவிட இயக்கத்துக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு என்ன பெருமை என்றால், இந்தத் தியாகிகள் அனைவரும் நம்முடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள். நமது கொள்கை வீரர்கள்! இன்றைக்கும் படங்களாக நம் முன்னால், நம்முடைய உணர்வுகளில் நிறைந்து, நம்மை வழிநடத்திக் கொண்டு இருக்கிறார்கள்" என இன்றைய தலைமுறைக்கு வரலாற்றை நினை வூட்டினார். அந்த வரலாற்றில் சத்தியமங்கலம் முத்து அழியாப் புகழ் பெற்றவர்.

> “இந்தத் தியாகிகள் அனைவரும் நம்முடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள். நமது கொள்கை வீரர்கள்! இன்றைக்கும் படங்களாக நம் முன்னால், நம்முடைய உணர்வுகளில் நிறைந்து, நம்மை வழிநடத்திக்கொண்டு இருக்கிறார்கள்!”

...துடிக்கும்

## பகுத்தறிவு என்றால் பதறுவது ஏன்?

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய உயர் நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 'பகுத்தறிவாளர்கள்தான் உண்மையான அயோக்கியர்கள்' என்று பேசியுள்ளார். இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, "பகுத்தறிவாளர்கள் எதையும் காரண காரியத்தோடு சொல்பவர்கள். கடவுள் என்ற பெயரால் எதை எதையோ வணங்குவதன் மூலம், மனிதனின் ஆதி காட்டுமிராண்டித்தன பருவ கால அறிவு என்பதை அறிவியல்பூர்வமாக விளக்கவே தந்தை பெரியார், மக்களைப் பண்படுத்த அந்தக் கருத்துகளைக் கூறினார்.

அதற்கு இப்படி ஒரு பதில் அளிப்பது, உரிய சமாதானமாகவோ, அறிவுள்ள வாதம் அடங்கியதாகவோ இருக்க முடியாது என்பதை அறிவுவயப்படாமல், ஆத்திரம், ஆணவம் கொப்பளிக்கப் பதிலளித்துள்ளார், உயர் நீதிமன்ற நீதிபதியாக உள்ள ஒருவர். பகுத்தறிவாளர்களை இப்படித் தாக்குவது ஆரியத்திற்குப் புதிதல்ல. உயர் நீதிமன்றப் பதவியில் உள்ள ஒருவர் – அப்பதவியின் மாண்பை, மரியாதையை இப்படிக் குறைக்கலாமா? என்பதே நமது வருத்தம்! பகுத்தறிவுவாதம் என்பது அறிவியல் (விஞ்ஞானம்)! அது அறிவு சார்ந்தது, வெறும் நம்பிக்கை என்று கூறுவது அறிவுக்கு ஒவ்வாதது" என்று பதிலளித்துள்ளார்.

'எதையும் சரி எது, தவறு எது? என்று ஆராய்ந்து சிந்தித்து, நிதானமாக முடிவெடுக்கக்கூடியவர்கள் பகுத்தறிவாளர்கள். அறிவு என்றாலே எரிச்சலடைவோருக்குப் பகுத்தறிவு என்றால், இன்னும் கோபம் கொந்தளிக்கத்தான் செய்யும்' என்று ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு சமூக வலைதளப் பக்கங்களிலும் எண்ணற்றோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## ஃப்ளாஷ்பேக்





கவிஞர் இளையகம்பன்

### தாயின் உள்ளம் கொண்டவர்!

2016-ஆம் ஆண்டு, கலைஞர் வெற்றிபெற்ற திருவாரூர் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முப்பெரும் விழாக் கவியரங்கில், கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் நானும் கவிதை முழங்கினேன். கலைஞர் முன்வரிசையில் அமர்ந்து, கண்டு களித்தார். மறுநாள், கோபாலபுரம் இல்லத்தில் இருந்து அழைப்பு வந்தது. நான் வணங்கியதும், 'கவியரங்கில் பாடிய கவிதை சிறப்பாக இருந்தது தம்பி. அதை முரசொலியில் பதிவிட வேண்டும்' எனக் கேட்டு வாங்கினார். அடுத்த நாள் முரசொலியில் மொத்தக் கவிதையும் இருபக்கம் அச்சாகி இருந்தது. அதைக் கண்டு என் கண்கள் ஈரம் கசிந்தன. அதைவிடவும் எனக்கு ஒரு சிறப்பு வேண்டுமா? அவரை எண்ணும் நொடிகள் எல்லாம் அந்த நினைவில் என் இதயம் பனிக்கும்.

**– கவிஞர் இளையகம்பன், பொதுச் செயலாளர், தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர்கள் சங்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### இரவோடு இரவாகக் கைது!

1965-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குடியரசு நாளை துக்க நாளாக அறிவித்து, வீடு தோறும் கறுப்புக்கொடி ஏற்றும் அறப்போரை நடத்தியது கழகம். கண்டனக் கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருந்தது. 25-ஆம் தேதி நள்ளிரவில் பேரறிஞர் அண்ணா கைது செய்யப்பட்டார். குளித்தலையில் பொதுக்கூட்டம் முடித்து, கோவை சென்றுகொண்டிருந்த கலைஞர், இரவு ஒரு மணிக்கு பசுபதிபாளையம் என்கிற இடத்தில் கைது செய்யப்பட்டார். இரவோடு இரவாக 1,500-க்கும் மேற்பட்ட கழக முன்னணியினர் கைது செய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131